**15.03.2020**

## பத்திரிக்கை செய்தி

## சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் நேற்று 14.03.2020 முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொரோனா வைரஸ் கிருமிநாசினி தெளிப்பு

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு வசதிகளை வழங்குவதன் ஒரு பகுதியாகவும், நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும், அசென்ட்யா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து கொரோனா வைரஸை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்று 14.03.2020 சனிக்கிழமை அன்று சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில், வேலை நேரத்திற்குப் (இரவு 11 மணி) பிறகு கொரோனா வைரஸ் கிருமிநாசினி தெளிப்புப் பணி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இன்று 15.03.2020 ஞாயிற்றுக்கிழமை விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலும் வேலை நேரத்திற்குப் (இரவு 11 மணி) பிறகு இப்பணி நடைபெறவுள்ளது.

மேலும் மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு கைபேசி மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை குறுஞ்செய்தியாகவும் அனுப்பி வருகிறது.

மெட்ரோ இரயில் நிலையங்களில் பயணிகளின் நலனுக்காக செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை தொடர்பான அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.